Date.18.02.2026.

கூடுதல் மாவட்ட நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம் )

விழுப்புரம்.

OS.24/2021

பி.வா.சா. 1

பெயர். திரு.பார்த்திபன்

மனுவின் பேரில் சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு உதவியாளர் அவர்களால் சத்தியபிராமணம் செய்விக்கப்பட்டார்.

<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை:-</u>

எனக்கும், வாதிக்கும் இடையே 18/01/2020 தேதியில் ஏற்பட்ட ஒரு ஒப்பந்த உடன்படிக்கை(வா.சா.ஆ 7) இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அவர் கொடுத்துள்ளது புகைப்பட நகல் தான். என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் தான் அந்த உடன்படிக்கை பத்திரத்தின் அசல் ஆவணம் என்றால், சரிதான். நான் கையெழுத்து மட்டும்தான் போட்டேன். அவர் எனக்கு புகைப்பட நகல் கொடுத்தார். அந்த புகைப்பட நகலில் சாட்சிகள் கையெழுத்து இருந்தது. அசல் ஒப்பந்த பத்திரத்தில், என்னுடைய கையெழுத்தை தவிர, வாதி சிவகுமாரின் கையொப்பமோ, சாட்சிகளின் கையொப்பமோ, ஆவணத்தை எழுதியவரின் கையொப்பமோ இல்லை என்று சொன்னால், சரிதான். எனக்கு சேர வேண்டிய பணத்திற்காக 3 காசோலைகளை என்னிடம் கொடுத்து விட்டதால் நான் அசல் ஆவணத்தை அவரிடம் கொடுத்து விட்டேன். அதன் பிறகு என்னிடம் வாதி உடன்படிக்கை ஆவணத்தின் புகைப்பட நகலை கொடுத்தார். அசல் ஆவணத்தை வாதியிடம் கொடுத்து விட்டேன் என்பதற்கு நான் எனது எதிருரையில் எந்த வாசகத்தையும் குறிப்பிடவில்லை என்று சொன்னால், அந்த சமயம் எனக்கு ஞாபகம் இல்லை. அதன் பின்னிட்டு என்னை நீதிமன்றத்தில் குறுக்கு விசாரணை செய்த

போதும், நான் இந்த விவரத்தை சொல்லவில்லை என்று சொன்னால், அவர் நகல் கொடுத்ததை நான் நீதிமன்றத்தில் சமர்ப்பித்து விட்டேன். அதனால் அசல் ஆவணம் அவர் வசம் தானே உள்ளது என்பதால், நான் அது பற்றி கவலைப்படவில்லை. உடன்படிக்கையின் நகலை தான் என்னிடம் கொடுத்தார்கள் என்ற விவரத்தை நான் எனது எதிருரையில் சொல்லவில்லை என்று சொன்னால், நான் அப்போது என்ன சொன்னேன் என்பது எனக்கு மறந்து விட்டது. பி.வா.சா.ஆ.1 ஆவணமான புகைப்பட நகலை பார்க்கும்போதே, அதில் உள்ள சாட்சி கையெழுத்துக்களை பார்க்கும்போதே, அதை நான் தான் தயார் செய்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்பது தெரிய வருகிறது என்று சொன்னால் சரியல்ல. நான் வாதியை ஏமாற்ற வேண்டும் என்ற கெட்ட நோக்கத்தில் இது போன்ற நகல் ஆவணத்தில் சாட்சிகள் மற்றும் எழுதியவரின் கையெழுத்தை பூர்த்தி செய்து தயார் செய்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அது உண்மையல்ல. நான் எனக்கு வாதி கொடுத்த புகைப்பட நகலை தான் நீதிமன்றத்தில் சமர்ப்பித்துள்ளேன் ஏமாற்ற வேண்டும் என்ற எண்ணம் எனக்கு இல்லை. வாதி என்னிடம் புகைப்பட நகலை எந்த தேதியில் எப்போது கொடுத்தார் என்றால், எனக்கு சரியாக ஞாபகம் இல்லை. உண்மையில் வாதி எனக்கு அந்த ஆவணத்தை கொடுத்து இருந்தால் எனக்கு அந்த ஆவணத்தை வாங்கிய தேதி ஞாபகம் இருக்கும் என்றும், நானே வாதியை ஏமாற்ற வேண்டும் என்ற நோக்கத்தில் அந்த ஆவணத்தை தயார் செய்ததால் தான், அந்த ஆவணத்தை கொடுத்த தேதி ஞாபகம் இல்லை என்று பொய் கூறுகிறேன் என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கு நிலுவையில் இருக்கும் போது அந்த ஆவணத்தின் அசல் ஆவணத்தை கொடுக்க வேண்டும் என்று எனது வழக்கறிஞர் மூலமாக ஒரு மெமோ கொடுத்தேன் என்றால் சரிதான். அதற்கு வாதியின் வழக்கறிஞர் அதன் அசல் ஆவணம் என்னிடம் இல்லை என்று பதில் கொடுத்துள்ளார் என்றால், சரிதான். எனக்கு வேண்டிய நபரிடம் நான் அசல் உடன்படிக்கை ஆவணத்தை கொடுத்துவிட்டு, தற்போது இந்த விவரம் வாதிக்கு தெரிய வந்து இந்த உண்மை நிலையை நீதிமன்றத்திற்கு நிரூபித்து உள்ளதால் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்குடன் வாதி எனக்கு பாத்தியமான

சொத்துக்களை ஜப்தி செய்ய ஒரு மனுவை (இ.ம.எண்-4/2021) தாக்கல் செய்துள்ளார் என்றால், சரிதான். அந்த மனுவில் நான் ஆஜராகி அந்த சொத்தை விற்க மாட்டேன் என்று 17/04/2021 தேதியில் ஒரு உறுதிமொழியை அளித்துள்ளேன் என்று சொன்னால், சரிதான். நீதிமன்றத்தில் உறுதி அளித்துள்ளவாறு நான் சொத்தை விற்கக் கூடாது என்று சொன்னால், சரிதான். நீதிமன்றத்தில் உறுதிமொழி அளித்ததை மீறி நான் சொத்தை விற்பனை செய்தால் என் மீது நீதிமன்ற அவமதிப்பு வழக்கு மேற்கொள்ளலாம் என்று சொன்னால் அது குறித்து எனக்கு சரியாக தெரியவில்லை. என் மகளின் படிப்பு செலவிற்காக நான் அந்த சொத்தை விற்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. நான் நீதிமன்றத்தில் விற்க மாட்டேன் என்று சொல்லிவிட்டு கடந்த 24/12/25 தேதியில் ஆவண எண் 3936/2025 என்ற எண்ணில் சுமித்ரா என்ற நபருக்கு விற்பனை செய்துள்ளேன் என்றால், சரிதான். அதற்கான வில்லங்க சான்று என்னிடம் காண்பிக்கப்படுவது தான் என்றால், சரிதான். அந்த ஆவணம் வா.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதனால் நான் வாதியை ஏமாற்றியதோடு, நீதிமன்றத்தையும் ஏமாற்றும் நோக்கத்தில் உண்மைக்கு புறம்பாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றும், அதனால் என் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் சொன்னால் சரியல்ல. நான் என் மகளை சுமார் ஒரு கோடி கடன் வாங்கி நியூசிலாந்தில் படிக்க வைத்தேன். அங்கே போன பிறகு அங்கு சூழ்நிலை மாறியதால் எனது மகளை அங்கிருந்து மீட்க வேண்டும் என்ற நெருக்கடியான காலகட்டத்தில் நான் அந்த சொத்தை விற்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. நான் எப்போது ஒரு கோடி கடன் வாங்கினேன் என்றால், அது சரியாக ஞாபகம் இல்லை. சுமார் 10 ஆண்டுகளுக்கு முன்பு இருக்கும். அவரது கல்விக் கடன் 2022 ஆம் ஆண்டு வாங்கினேன். இந்தியன் வங்கியில் வாங்கினேன். ரூ.53 லட்சம் கல்விக்கடன் வாங்கினேன். ரூ.60 லட்சம் OD வாங்கினேன். பாக்கி தொகை எல்லாம் நான் வெளியில் கடன் வாங்கி தான் செலுத்தினேன் என்றால், அது சரியல்ல. என் தாய் தந்தையர் ஏற்கனவே ஆசிரியர்களாக இருந்து பணி ஓய்வு பெற்றார்கள் அப்போது வந்த தொகை மற்றும் என் அக்கா தங்கை மற்றும் மனைவி நகைகள் ஆகியவற்றை அடகு வைத்து தான் இந்தத் தொகையை சரி செய்தேன். எனது அப்பா அம்மாவிற்கு

என்ன வயது என்றால், இறக்கும்போது 2019 ஆம் ஆண்டில் எனது அம்மாவிற்கு 73 வயதாகும். 2021 ஆம் ஆண்டில் எனது தந்தை இறந்தபோது அவரது வயது 80 ஆகும். இருவருமே அரசு ஆசிரியர் பணியில் இருந்தார்கள். நான் சொல்வது போல பார்க்கும்போது எனது அம்மா சுமார் 20 வருடங்களுக்கு முன்பும், எனது அப்பா சுமார் 30 வருடங்களுக்கு முன்பும் பணி ஓய்வு பெற்றுவிட்டார்கள் என்றால் சரிதான். அந்த பணத்தை வைத்து தான் நான் பெண் கட்டினேன் என்று தற்போது வழக்கிற்காக பொய் கூறுகிறேன் என்றும், வாதியிடம் வாங்கிய கடனை ஏமாற்றுவதற்காக தான் உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் 30 ஆண்டுகள் ஒப்பந்ததாரர் பணியில் ஈடுபட்டுள்ளேன்.

**<u>மறுவிசாரணை</u>**

**<u>இல்லை.</u>**